குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண்.52/2025

ம.சா.1

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 15–ம் தேதி திங்கள்கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரஸ்வதி | தொழில் | |
| தந்தை பெயர் | ராமநாதன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.50 மணி,

Complainant Saraswathy present. Advocate Mr.D.M.Senthilkumar present for Complainant. Accused Kumar present. Advocate Mr.Ezhilarasu present for Accused.

**முதல் விசாரணை :**

1. நான் எஸ்.எஸ்.எல்.சி முடித்துவிட்டு ஆசிரியர் பயிற்சி 2 வருடம் படித்துள்ளேன். நான் 05.02.2025 ஆம் தேதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் விபரங்கள் எனக்கு தெரியும். அந்த அறிவிப்பில் எனக்கும் எனது கணவருக்கும், ஆஜர் எதிரிக்கும் இடையே என்ன உறவு என்ற விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது வழக்கறிஞர் அறிவிப்பில் ஆஜர் எதிரியிடம் எந்த தேதியில் நான் சீட்டு போட்ட பணத்தை கேட்டேன் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் நான் 20 மற்றும் 25 மாதத்தில் சீட்டு போட்டு முடித்தேன் என்று சொல்லியுள்ளேன், எந்த தேதியில் சீட்டு செலுத்தி முடித்தேன் என்ற விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

2. எனது புகார் மனு மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் மாதாந்திர சீட்டு தொகை எவ்வளவு என்று குறிப்பிடவில்லை என்றால் அதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். முதல் மாதத்தில் என்ன தொகை செலுத்துகிறோமோ அதே தொகையை தான் அனைத்து தவணைகளிலும் செலுத்த வேண்டும் என்றால் சரியல்ல. சில மாதம் அதிகமாகவோ சில மாதம் குறைவாகவோ செலுத்துவோம். ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 ஆவணத்தில் தொகை திருத்தம் செய்து எழுதப்பட்டது என்றால், ஆஜர் எதிரி தவறாக எழுதிவிட்டு, பிறகு திருத்திக்கொடுத்துள்ளார்.

3. சீட்டு தொகையை ஸ்ரீ விநாயகா பைனான்ஸ் அலுவலகத்தில் செலுத்தினேனா என்றால் ஒருமுறை மட்டும் நேரில் சென்றேன். மற்ற மாதங்களில் ஆஜர் எதிரி நேரில் வந்து பணத்தை வாங்கி செல்வார். முதல் சீட்டு எந்த தேதியில் செலுத்தினேன்

என்றால் 20.10.2019 ஆம் தேதியில் செலுத்தினேன். 2 வது சீட்டு 25.01.2020 ஆம் தேதி செலுத்தினேன். 3 வது சீட்டு 25.06.2020 ஆம் தேதி செலுத்தினேன்.

**கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.22 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court,
Omalur